பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
01 10 2023 **SUNDAY** 12 40 **PM**
வணக்கம் - ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ‘தூய்மையே சேவை’ இயக்கத்தின் கீழ் நாடுமுழுவதும் இன்று துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

2. குன்னூர் விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

3. பாதுகாப்பு கணக்குத் துறையின் செயல்பாடுகள் பாராட்டுதலுக்குரியது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

4. தமிழகம் முழுவதும் ஆயிரம் இடங்களில் காய்ச்சலை கண்டறிவதற்கான சிறப்பு முகாம்கள் நடைபெற்று வருகின்றன.

5. ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், இரண்டு வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளது.

>>>><<<<

காந்தி ஜெயந்தியை முன்னிட்டு தூய்மையே சேவை இயக்கத்தின் கீழ், நாடுமுழுவதும் தூய்மைப் பணிகள் இன்று மேற்கொள்ளப்பட்டன.

பொதுமக்கள் ஆர்வத்துடன் இதில் பங்கேற்றதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி, உடற்பயிற்சியாளர் **Ankit Baiyanpuriya –** வுடன் இணைந்து துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டார்.

மத்திய அமைச்சர்களும் தூய்மைப் பணிகளை மேற்கொண்டனர்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, அஹமதாபாதில் இந்த இயக்கத்தின் கீழ் நடைபெற்ற தூய்மைப் பணிகளில் பங்கேற்று குப்பைகளை அகற்றினார்.

தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அனுராக் தாக்கூர், ஹிமாச்சலப்பிரதேசம், **Hamirpur**-ல் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று, தூய்மையே சேவை இயக்கத்திற்கான உறுதிமொழியை செய்து வைத்தார்.

ஹரியானா மாநிலம், குருகிராமில் மத்திய அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தலைமையில் ஏராளமானோர் இப்பணிகளை மேற்கொண்டனர்.

மகாராஷ்ட்ராவில் அம்மாநில முதலமைச்சர் திரு. ஏக்நாத் ஷிண்டே, துணை முதலமைச்சர் திரு. தேவேந்திர பட்னவிஸ் உள்ளிட்ட பலர் தூய்மைப் பணிகளை மேற்கொண்டனர்.

புதுதில்லியில் உள்ள அம்பேத்கர் நினைவிடத்தில் பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி. நட்டா, மத்திய இணையமைச்சர் திருமதி. மீனாட்சி லேகி ஆகியோர் தூய்மைப் பணிகளில் ஈடுபட்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடையே பேசிய திரு. ஜெ.பி. நட்டா, மகாத்மா காந்தியின் கனவை நனவாக்கும் விதத்தில் இந்த தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக கூறினார்.

நாடுமுழுவதும் பிஜேபி தொண்டர்கள் இதில் பங்கேற்றதாகவும் திரு. நட்டா தெரிவித்தார்.

தமிழகத்தில் மத்திய அரசு அலுவலகங்கள், கடற்கரை பகுதிகள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் தூய்மையே சேவை இயக்கம் மேற்கொள்ளப்பட்டது.

செங்கல்பட்டு மாவட்டம், உத்தண்டி அருகே நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநில ஆளுநர் திரு. ஆர்.என். ரவி பங்கேற்று, துப்புரவுப் பணிகளை மேற்கொண்டார்.

கோவையில் பிஜேபி மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை தலைமையில் பிஜேபி தொண்டர்கள் தூய்மைப் பணிகளை மேற்கொண்டனர்.

முன்னதாக செய்தியாளார்களிடம் பேசிய திரு. அண்ணாமலை, பிரதமரின் வேண்டுகோளை ஏற்று இந்த பணிகள் நடைபெறுவதாக கூறினார்.

பிரதமர் விடுத்த அழைப்பின் காரணமாக கதர் ஆடைகளை பயன்படுத்துவோர் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

நான்காயிரம் கோடி ரூபாய் அளவிற்கு இருந்த காதி பொருட்கள் விற்பனை கடந்த ஒன்பதாண்டுகளில் 1 லட்சம் கோடி ரூபாயை தாண்டியுள்ளதாகவும் அவர் கூறினார்.

உள்ளூர் பொருட்களின் உற்பத்திக்கு பொதுமக்கள் ஊக்கமளிக்க வேண்டும் என்றும் திரு அண்ணாமலை கேட்டுக் கொண்டார்.

வேலூர் மாவட்டம், நாகநதி ஆறு அமைந்துள்ள பகுதியில் நடைபெற்ற துப்புரவுப் பணியில் ஏராளமானோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - மோகன் 16 செகண்ட்ஸ்)

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் அழைப்பினை ஏற்று தாங்கள் இந்தப் பணிகளை மேற்கொண்டதாக தூய்மைப் பணிகளில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - பங்கேற்றவர்கள் 37 செகண்ட்ஸ்)

சென்னை அகில இந்திய வானொலி நிலைய வளாகத்திலும் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

சென்னையில் உள்ள உணவுக் கழக அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்பு தூய்மைப் பணிகளில் ஊழியர்கள் பங்கேற்றனர்.

சென்னை மெரினா கடற்கரைப் பகுதியில், மாநிலக் கல்லூரி மாணவர்கள் விழிப்புணர்வு பேரணியில் பங்கேற்றதோடு துப்புரவு பணிகளையும் மேற்கொண்டனர்.

சென்னை பெசண்ட் நகரில் உள்ள மத்திய அரசு பணியாளர் குடியிருப்பு வளாகத்தில் இந்த இயக்கத்தின் கீழ் நடைபெற்ற துப்புரவுப் பணிகளில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

>>>><<<<

பாதுகாப்பு கணக்குத் துறையின் செயல்பாடுகள் பாராட்டுதலுக்குரியது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

பாதுகாப்பு கணக்குத் துறையின் நிறுவன தினத்தை ஒட்டி, இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

நாட்டின் பாதுகாப்பு திறனை மேம்படுத்துவதில், இந்த துறையின் பணி இன்றியமையாதது என்று அவர் குறிப்பிட்டார்.

பாதுகாப்புத் துறைக்கான நிதி ஒதுக்கீட்டை முறையாக பயன்படுத்துவதிலும், இந்த துறையை சேர்ந்த அதிகாரிகளின் பணி சிறப்பாக உள்ளது என்றும் திரு. ராஜ்நாத் சிங் பாராட்டு தெரிவித்துள்ளார்.

>>>><<<<

தமிழகத்தின் நீலகிரி மாவட்டம், குன்னூர் அருகே, பேருந்து ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்து நேரிட்ட விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த விபத்து தமக்கு மிகுந்த மனவேதனையை ஏற்படுத்தியிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த விபத்தில் காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகனும் இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், தென்காசியிலிருந்து சுற்றுலா வந்த பேருந்து இந்த விபத்தில் சிக்கியது மிகுந்த மன வருத்தத்தை அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாகவும் திரு. முருகன் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் உடலுக்கு மாநில அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 9-ஆக அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - மா. சு 45 செகண்ட்ஸ்)

>>>><<<<

தமிழகம் முழுவதும் ஆயிரம் இடங்களில் காய்ச்சலை கண்டறிவதற்கான சிறப்பு முகாம்கள் நடைபெற்று வருகின்றன.

டெங்கு மற்றும் மழைக்கால தொற்றுநோய்கள் பரவாமல் தடுக்கும் நோக்கில், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

தமிழகத்தில் திமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம், காணொலி வாயிலாக இன்று நடைபெற்றது.

திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு. மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மக்களவைத் தேர்தல் குறித்து விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

காவிரி பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக திமுக அரசு உடனடியாக அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், காவிரி பிரச்சினையில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட, உறுதியான நிலைப்பாட்டினை திமுக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கோரியுள்ளார்.

**>>>><<<<**

நடிகர் திலகம் சிவாஜிகணேசனின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, சென்னை அடையாறில் உள்ள அன்னாரது மணிமண்டபத்தில் சிவாஜியின் திருவுருவச் சிலைக்கு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

**>>>><<<<**

ஆசிய விளையாட்டுப் போட்டியில், இந்தியா இன்று ஒரு தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

சீனாவின் **Hangzhau**-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் துப்பாக்கிச் சுடும் குழுப் பிரிவில் இந்தியா தங்கப்பதக்கத்தையும், மகளிர் குழுப் பிரிவில் வெள்ளிப் பதக்கத்தையும் வென்றது.

கோல்ப் போட்டியில், **Aditi Ashok** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் துப்பாக்கிச் சுடும் போட்டியில் **Chenai Kynan** மற்றும் **Zoravar Singh–**ம் மகளிர் துப்பாக்கிச் சுடும் பிரிவில் **Manisha –**வும் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஸ்குவாஷ் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் தீபிகா பல்லிக்கல் – ஹரிந்தர் பால் இணை வெற்றிபெற்றது.

ஆடவர் 200 மீட்டர் ஓட்டத்தில் **Amlan Borgohain** அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

குத்துச்சண்டை போட்டியின் ஆடவர் 57 கிலோ எடைப்பிரிவில் **Praveen Hooda** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 11 தங்கம், 16 வெள்ளி, 14 வெண்கலப்பதக்கங்களுடன், பதக்கப்பட்டியலில் 4வது இடத்தில் உள்ளது.

**>>>>END<<<<**